# திருமலை நகரம் முற்றாகப் புலிகளின் வசம்

(திருமலை)
இந்திய இராணுவத்தினர் நேற்றுத் திருமலை நகரை விட்டு முற்றாக வெளியேறினர். இவர்கள் அனைவரும் சீனன் குடாவில் உள்ள துறைமுகப்பகுதியை நோக்கிச் சென்றுள்ளனர். இதேவேளை சீனன் குடாவில் இருந்து நேற்று ஒரு தொகுதி இந்தியப்படையினர் கப்பல்களில் இந்தியா நோக்கிப் புறப்பட்டனர். இவ்வேளை நேற்றுத்திருமலை உப்புவெளி, உவர்மலைப் பகுதிகளுக்கு விடுதலைப்புலிகள் சென்றுவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. தற்போது திருமலை நகரில் விடுதலைப்புலிகளின் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. அவர்களது இராணுவ வாகனங்களின் நடமாட்டமும் திருமலையில் தற்போது அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (5)


பக்கங்கள் ஆறு — விலை ரூபா: 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 38 — புதன் 14-03-1990 (பங்குனி 01) ஷஃபான் 16


# வடக்குகிழக்கு மாகாணசபையை ஆளுநர் நளின் பொறுப்பேற்பார்

## மாகாணசபையைக் கலைப்பது குறித்து சட்டமா அதிபரிடம் அரசு ஆலோசனை

**வடக்குகிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்தை அதன் ஆளுநர் லெப் ஜெனரல் நளின் செனிவிரத்ன பொறுப்பேற்பார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

மாகாணசபையின் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் உட்பட மாகாணசபை உறுப்பினர்கள் பலர் இலங்கையை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து மாகாண சபை நிர்வாகம் ஸ்தம்பிதமடையும் நிலையில் உள்ளது.

மாகாணசபையைக் கலைப்பது குறித்து அரசு சட்டமா அதிபரின் ஆலோசனையைக்

—5 ஆம் பக்கம் பார்க்க

## தந்தங்களுடன் பிறந்த யானை முகப் பசுக்கன்று

மலையகத்தில் வட்டவளைப் பகுதியில் தந்தம், தும்பிக்கை ஆகியவற்றுடன் யானை முகம் கொண்ட கன்றுக்குட்டி ஒன்று பிறந்துள்ளது. இக் கன்றுக்குட்டியின் தும்பிக்கை எட்டு அங்குல நீளத்திற்குக் காணப்படுகிறது. சிறிய இரு தந்தங்களும் வாய்ப்பகுதியில் காணப்படுகின்றன. இக்கன்றுக்குட்டிக்கு தும்பிக்கை காணப்படுவதால் அது தாய்ப்பசுவில் பாலைக் குடிப்பதற்கு திணறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 1,500 இந்தியப்படை மட்டுமே தற்போது இங்கு உள்ளது-ரஞ்சன்

இந்தியப்படைகள் விலகியதும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இலங்கைப் பொலிஸார் தமது வழமையான நடவடிக்கைகளைக் கவனிப்பார்கள் என பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில் 1,500 இந்தியப் படையினரே உள்ளனர் வடபகுதியில்பலாலி இந்திய இராணுவ முகாமும் மூடப்பட்டுவிட்டது எஞ்சிய துருப்பினரும் இம்மாதத்திற்குள் வெளியேறி விடுவர் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## உள்ளே

புதிய சீருடையில் புலிகள் புடை சூழ தலைவர் பிரபாகரன் வெளியே வருவார்

[பக்கம் 3]

## இலங்கை இராணுவ முகாம்கள் மட்டக்களப்பில் மூடப்பட்டன

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பில் இருந்து இரண்டு இலங்கை இராணுவ முகாம்கள் வாபஸ் பெறப்பட்டுள்ளன. புலிபாய்ந்தகல், கரடியனாறு ஆகிய இடங்களிலுள்ள முகாம்களே மூடப்பட்ட முகாம்களாகும்.

அமைச்சர் ஹமீதிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்தே இந்த முகாம்கள் மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வடக்குக் கிழக்

—6 ஆம் பக்கம் பார்க்க

### இன்று மன்னாரில் திறப்பு விழா

## வடக்கின் சகலமாவட்டங்களிலும் செஞ்சிலுவைச் சங்கப் பணிமனை

மன்னார் மாவட்டச் செஞ்சிலுவைச் சங்கப் பணிமனை இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பணிமனைகளைத் தொடர்ச்சியாகத் திறந்து வைக்கும் திட்டத்தின் கீழேயேஇந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை 15ம் திகதி கிளிநொச்சிமாவட்டத்திலும்,

— 6 ஆம் பக்கம் பார்க்க

# பொலிஸ் துப்பாக்கிச் சூடு கல்முனையில் பதட்டம்

[மட்டக்களப்பு]
நேற்றுக் கல்முனை பொலிஸ் நிலையம் முன் காணப்பட்ட வீதித்தடையை விடுதலைப்புலிகள் நீக்கியபோது பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் - இதனால் கல்முனை நகரில் நேற்றுக்காலை பதட்டம் நிலவியதையடுத்து கடைகள், அலுவலகங்கள் யாவும் இழுத்து மூடப்பட்டன.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித்தலைவர் கரிகாலன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுடன் பேச்

— 6 ஆம் பக்கம் பார்க்க

### திருகோணமலையில்

## மாகாணசபை ஊழியர் லீவில் அலுவலகங்கள் மூடப்பட்டன

(திருமலை)
திருமலையிலுள்ள வடக்கு, கிழக்கு மாகாண சபையின் அலுவலகங்களில் கடமைக்கு சமூகமளிக்கும் ஊழியர்களின் தொகை நாளுக்குநாள் குறைவடைந்து வருகின்றது.

நேற்றுத் திருமலையிலுள்ள மாகாண சபையின் அலுவலகங்களுக்கு பத்து வீதத்திற்கும் குறைவான ஊழியர்களே கடமைக்குச் சென்றிருந்தனர். நண்பகலுக்குப் பின் அவர்களும் வீடு திரும்பினர், அதனைத் தொடர்ந்து அலுவல

— 6-ம் பக்கம் பார்க்க

### யாழ், திருமலையில்

## புதிய தேசிய அடையாள அட்டைகள் இந்தியப்படை வெளியேறியபின்பே வழங்கப்படும்

இந்திய அமைதிப் படையினர் நாட்டை விட்டு வெளியேறிய பின்னரே ஆட்பதிவுத் திணைக்கள அடையாள அட்டைகள் யாழ்ப்பாணம், திருமலை மாவட்டங்களுக்குப் புதிதாக வழங்கப்படுமென கொழும்பு வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

யாழ்.மாவட்டத்திற்கு கடந்தவருட நவம்பர் மாதத்தின் பின்னர் புதிய அடையாள அட்டை விண்ணப்பங்களின் எதற்கும் அடையாள அட்டைகள் வழங்கப்படவில்லையென யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. புதுப்பித்தல்,

—6 ஆம் பக்கம் பார்க்க

## 350 கிராம் பாணே நட்டம் 400 கிராம் எப்படி தயாரிப்பது

350 கிராம் பாண் தயாரித்தாலே தமக்கு நட்டம் ஏற்படுவதாக யாழ். மாவட்ட பேக்கறி உரிமையாளர் சங்கம் உள்நாட்டு வியாபார ஆணையாளருக்குத் தெரிவித்துள்ளது. 350 கிராம் பாண் தயாரித்தால் ஒரு மூடை மாவுக்கு 91 ரூபா 95 சதம் நட்டமேற்படுவதாகவும் இந்நிலையில் எப்படி 400 கிராம் பாண் தயாரிப்பது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். செயலக உள்நாட்டு அதிகாரிகள் ஆவலிட

— 6 ஆம் பக்கம் பார்க்க

## வடகிழக்கு மாகாண சபையின் 12 வாகனங்கள் இனந்தெரியாதோரால் கைப்பற்றப்பட்டன

(மட்டக்களப்பு)
வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு சொந்தமான பன்னிரண்டு வாகனங்கள் இனந்தெரியாதோரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

திருமலை நகரில் வைத்து இந்த வாகனங்கள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்திய அரசாங்கத்தினால் சில மாதங்களுக்கு முன்னர் வடகிழக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்ட இப்புதிய வாகனங்களுக்கு சில வாரங்களுக்கு முன்னர்தான் இலங்கை அரசினால் பதிவிலக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.

வடக்கு கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர் என். கிருஷ்ணமூர்த்தி, காணி விவசாய அமைச்சின் செயலாளர் எஸ். சிவதாசன் ஆகியோரின் உத்தியோகபூர்வ வாகனங்களும் சில தினங்களுக்கு முன்னர் கடத்தப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகை விழாவில் டொமினிக் ஜீவா

# சிற்றிலக்கிய சஞ்சிகை தோடங்கியவர்கள் தோல்வியையே தழுவினுர்கள்

''சிற்றிலக்கிய ஏடுகளைத் தொடங்கிய பல பெரிய இலக்கிய கர்த்தாக்கள் எல்லாம் தோல்வியையே தழுவினுர்கள் 'மல்லிகை' மட்டுமே வெற்றியுடன் கால் நூற்றுண்டைக் கடந்து இன்று வெள்ளி விழா கொண்டாடுகின்றது.''

இவ்வாறு மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா கூறிஞர். 'மல்லிகையின்' இருபத்தைந்தாவது ஆண்டு மலர் வெளியீட்டு விழா நாவலர் மணி மண்டபத்தில் எழுத்தாளர் திரு. தெளிவத்தை ஜோசப் தலைமையில் நடைபெற்றது. இதில் அவர் தொடர்ந்து பேசுகையில்-

''மல்லிகை ஐம்பதாவது ஆண்டுமலரையும் எனது கைகளாலேயே உங்களுக்கு வழங்குவேன் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கின்றேன்'' என்று நம்பிக்கை தெரிவித்தார். மல்லிகை நிறுவனத்தில் பலஆண்டுகளாகக் கடமை புரியும் ஊழியர்கள் மூவர் பொன்னுடை போர்க்சப்பட்டு கௌரவிக்கப்பட்டமை இவ்விழாவின் முக்கிய அம்சமாகும்.

தலைமைவகித்த திரு. தெளிவத்தை ஜோசப்புடன், திக்கு வெல்லைக்கமால், மேமன்கவி, டாக்டர் எம். சே. முருகானந்தன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இறுதி நிகழ்ச்சியாக நவீன இலக்கிய கர்த்தாக்கள் சமூகக் கடமையினின்றும் வழுவி விட்டனரா? என்பது பற்றிய பட்டிமன்றத்தில் திரு. செங்கை ஆழியானும், புலவர் ஈழத்துச் சிவானந்தனும் வாதாடினுர்கள். கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் இப்பட்டி மன்றத்திற்கு நடுவராக கலந்து கொண்டார்.


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 04 — 10 — 1968

மறைவு: 06 — 03 — 1988

### செல்வி. சு, சுப்பிரமணியம்

வீட்டினில் விளக்கு வைக்க
விழித்திருப்பாய் எம்முகத்தில்
சோதனைகள் பல நடத்தி
தூங்குகிருய் எம்மனதில்
காலங்கள் இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டும்
கவலைகள்தான் தீருவ தெப்போ
சோகத் தீ எம் இதயத்தில்
சுடர்விட்டு எரியுதம்மா
அன்புக்கரங்கள் கொண்டு
உன்னை எப்போது அழைப்பதம்மா.

நின்பிரிவால் வாடும்:

தகப்பன். க. சுப்பிரமணியம், தாய் சு பார்வதி, சகோதரர்கள் சு. ரவிச்சந்திரன் (ஜேர்மனி), சு கலைச்செல்வம் (சுவிஸ்) சு. சேதுகாவலர் (தபாலகம், பூநகரி), சகோதரி இ பத்மினி மைத்துனர், அ. இராசேந்திரம் (ப. நோ. கூ. சங்கம், பூநகரி), பெருமக்கள், வர்ணன், அமுதன், விந்தன், நிகன், பெரிய தகப்பன்மார், சிறியதகப்பன்மார், மாமன்மார், மாமிமார், சிறியதாய்மார்.

சித்தங்குறிச்சி
பூநகரி

03105



★ ஜேர்மனி

★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு போக விரும்புபவர்கள் எம்மை தொடர்பு கொள்ளவும்

★ ஈராக்

நாட்டுக்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன

| | | |
|---|---|---|
| 1. விவசாய மேற்பார்வையாளர் | (2) | I. D 130 |
| 2. கிளீனஸ் மேற்பார்வையாளர் | (2) | I D 125 |
| 3. கார் பெயின்டர் | (20) | I. D 100 |
| 4. தச்சு தொழிலாளர் | (20) | I. D 80 |
| 5. மேசன் தொழிலாளர் | (20) | I. D 80 |
| 6 பிற்றர் (பொருத்துபவர்) | (20) | I. D 80 |
| 7. விவசாயத் தொழிலாளர் | (50) | I D 65 |
| 8. கனரக வாகன சாரதி | (4) | I. D 110 |

(உணவு, வைத்தியம், தங்குமிடம் இலவசம்)
6 புகைப்படம், கடவுச்சீட்டுடன் எம்மை தொடர்பு கொள்ளவும்.

V. T. R. TRAVELS

41, 3rd Cross street Jaffna,

03109


## உரிமையாளர்கள் உதவுவார்களா ?

(அரியாலை)

அரியாலை கலைமகள்வீதியையும் நாவலர் வீதியையும் இணைக்கின்ற நொத்தாரிஸ் வீதி கடந்த காலங்களில் மிகவும் குறுகலான வீதியாக இருந்தது. நகரின் அபிவிருத்தியில் அக்கறைகொண்டவர்கள் எடுத்த முயற்சியின் பயனாக இப்போது வீதி அகலிக்ககப்பட்டு பெரும்பாலான வேலிகள் எல்லாம் மதிலாக்கப்பட்டு அழகாகவும், வசதியாவும் இருந்தபோதிலும் மதில் அமைப்பை மேற்கொண்டவர்கள் முன்னைய வேலியில்இருந்த பெரிய மரங்களை இன்னமும் வெட்டாமல் விட்டிருப்பதால் அவ் வீதியில் அடிக்கடி சிறு சிறு விபத்துக்கள் ஏற்படுவதுடன் போக்குவரத்துக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றது.

அந்த மரங்களைவெட்டி வீதியின் அகலத்தைக்கூட்டுவதற்கு வேலியின் உரிமையாளர்கள் உதவவேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது.

## பதவி உயர்வு

கடந்த நான்கு வருடகாலமாக வண்ணுர்பண்ணை தபாற்கந்தோரில் தபாலதிபராகப் பணியாற்றிய ஆ. முருகேசு கடந்த மாதம் முதல் சுந்தளாய்க்கு பதவியுயர்வுடன்இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். (06)

## வவுனியா கலைமகள் புதிய நிர்வாகிகள்

வவுனியா கலைமகள் சனசமூக நிலைய நடப்பு வருடத்திற்கானவருடாந்தப் பொதுக்கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. அன்றைய கூட்டத்திற்கு சனசமூக நிலைய உத்தியோகத்தர் திருமதி மகேந்திரன் கலந்துகொண்டு தனது உரையில் சனசமூக நிலைய வளர்ச்சி, அதன் பங்களிப்புகள், அதன் சேவை என்பன பற்றியும் விளக்கமளித்த வவுனியா மாவட்டத்தில் இதுவரை சனசமூக நிலைய சம்மேளனம் ஆரம்பிக்கப்படவில்லையென்பதும் ஆரம்பித்தால் அதனுல் பலநன்மையும் பல தரப்பட்ட வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளலாமெனவும் அவர் தனது உரையில் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- இ. செல்வராசா, உபதலைவர்:- நா. கச்சுமுகைதீன், செயலாளர்;- அ. சத்தியகாந்தி, உபசெயலாளர்:- அ. [illegible], பொருளாளர்: திரு. [illegible] (11)

யாழ்: ப. நோ. கூ. சங்க

# இயக்குனர் சபைத் தேரிவை இரத்துச் செய்ய மகஜர்

யாழ். ப.நோ.கூ.சங்க இயக்குனர் சபைத்தெரிவில் மாற்றம் செய்யும்படி யாழ்.ப.நோ. சங்க பொதுச்சபை உறுப்பினர்கள் கையொப்பம் இட்ட கடிதமொன்று யாழ். கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது அக் கடிதத்தில்:

கடந்தவருடம் நடைபெற்ற யா.பல நோ.சங்க பொதுச்சபைக் கூட்டத்தில் புதிய இயக்குனர் சபை தெரிவும், உப சபைகளினது தெரிவும் பொதுச்சபை உறுப்பினர்களாற் தெரிவு செய்யப்பட்டது. இதற்கமைய இரண்டு இயக்குனர், இரண்டு பொதுச்சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த மாதத்தில் நடைபெற்ற கொள்வனவுஉப சபைக் கூட்டங்களுக்கு பொதுச்சபை உறுப்பினர்கள் சமுகமளிக்காத காரணத்தால் அவ்விடங்கள் காலியாக உள்ளன. இவ்விடங்களுக்கு மீண்டும் வேறு புதிய பொதுச்சபை உறுப்பினர்களே இடம்பெற வேண்டும். இதற்கு மாருக யா.பல நோ. கூ சங்க பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் இயக்குனராக உள்ளவரை கொள்வனவு உபசபை உறுப்பினராகத் தெரிவு செய்துள்ளார்கள்.

இவர் 1987, 1988 ம் ஆண்டில் யா. பல. நோ. கூ. சங்க உப தலைவராக இருந்து முறைகேடாகக் கொள்வனவு செய்தமையால் 42 பொதுச்சபை உறுப்பினர்கள் கையொப்பமிட்டு அக்காலப் பகுதியில் உள்ள கூ. அ. உ. ஆணையாளருக்கு இது விடயம் பற்றி விசாரணை நடாத்துமாறு கேட்டுக்கொண்டதற்கமைய கூட்டுறவுத் திணைக்களத்தால் விசாரணை நடைபெற்றது. இத் தீர்ப்பில் அவர் குற்றவாளியாக உள்ளார்.

இப்படியான குற்றவாளியை மீண்டும் யா.பல நோ. கூ.சங்க இயக்குனராகத் தெரிவு செய்யப்பட்டதுடன், தற்போது கொள்வனவு உப சபையில் ஓர் உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதையிட்டு மிகுந்த அதிருப்தி அடைகின்ருேம். எனவே இத் தெரிவைத் தாங்கள் உடன் நிறுத்தி இவ் வெற்றிடத்திற்குப் பொதுச்சபை உறுப்பினர்களில் இருந்து இரண்டு பேரைத் தெரிவு செய்ய ஆவன செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்ருேம். என்றுகுறிப்பிடப்பட்டிருந்தது

# மயிலணி மாணவரிடையே வீட்டுத்தோட்டப் போட்டி

வீட்டுத் தோட்டம், உணவுற்பத்தி ஆகியவற்றை ஊக்குவிக்கும் பொருட்டு மயிலணி சைவமகாவித்தியாலயம் பாடசாலையின் ஆண் பெண் மாணவரிடையே வீட்டுத் தோட்டப் போட்டியை ஆரம்பித்துச் சிறப்பாகச் செயற்படுத்தி வருகின்றது.

வீட்டுத்தோட்டமுயற்சியை மாணவர் தொடர்ந்தும் மேற்கொள்ளுமுகமாக மேற்படி போட்டித் தொடர்மதிப்பீட்டு அடிப்படையில் அமைக்கப்பட்டுச் சிறந்தபரிசுத்திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு ஜனவரியில் ஆரம்பித்த இப்போட்டி, ஒவ்வொன்றும் 6 மாதங்களைக் கொண்ட 4 கட்டங்களாக டிசம்பர் 1991 வரை நடாத்தப்படும். ஒவ்வொரு கட்டத்திலும் விவசாய ஆசிரியரைப் பொறுப்பாகக் கொண்ட ஆசிரியர் குழுவொன்று வீட்டுத்தோட்டங்களை இரண்டு அல்லது மூன்று முறை பார்வையிட்டு மதிப்பீடுசெய்துகட்டத்தின்முடிவில் பரிசுக்குரிய மூவரைத் தெரிவு செய்யும். போட்டியிற்பங்கு பற்றும சகல மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசாக நற்சான்றிதழ் வழங்கப்படும். இவ்வாறு ஜூலை 1990 ல் மேற்போன்று 4 கட்டங்களைக் கொண்ட மற்றோர் போட்டி ஆரம்பமாகும்.

கல்வித்திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க மேற்படி பாடசாலையில் உணவுற்பத்தியுடனுன விவசாயச் செயன்முறையை முன்னிட்டு விவசாய மாணவர், சாரணர், குருளைச்சாரணர் ஆகிய குழுக்கள் வெவ்வேறுகப் பாடசாலைத் தோட்டத்தை அமைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## சித்த மருத்துவப் பிரிவிற்கு 1989/90ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவப் பிரிவிற்கு பி. எஸ். எம் எஸ். பட்டமாணிப் படிப்பிற்கான மாணவர்களைச் சேர்ப்பதற்கு பின்வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

(அ) 1986, 1987, 1988 ஆகஸ்ட் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்கவேண்டும்.

(ஆ) 1990 -ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 -ம் திகதியன்று 17 வயதிற்கு குறையாதவராக இருக்கவேண்டும்.

அனுமதி பற்றிய விபரங்களும், விண்ணப் பத்திரமும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தேர்வுகள்) தேர்வுக்கிளை அவர்களிடமிருந்து ரூபா 10 ச் செலுத்தியோ. தபால் மூலம் எனின் 23 × 10 செ மீ அளவுள்ள தாபல் மேலுறை ஒன்றை முத்திரையிட்டு விலாசமிட்டு ரூபா 10 க்கான காசுக் கட்டளையை அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய கடைசித்திகதி; 16 - 04 - 1990

பதிவாளர்

03117


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்தவாழ்வை200ரூபா பெற்றுக் கொடுக்குமா?

போபால் விஷவாயு விபத்தில் பெருமளவு பாதிக்கப்பட்ட மக்களுக்கு இடைக்கால நிவாரணத் தொகையாக மாதந்தோறும் இருநூறு ரூபாவை வழங்குவதற்கு இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

இந்த இருநூறு ரூபா இடைக்கால உதவியாக மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ச்சியாக வழங்கப்படும் எனவும் அரசு அறிவித்துள்ளது.

அரசின் கணிப்பீட்டின்படி விஷ வாயுவினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்க 3.6 மில்லியன் ரூபா தேவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

1984-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஐந்தாம் திகதி இடம்பெற்ற இந்த விஷவாயுக் கசிவினுல் மூவாயிரம் பேர் இறந்துள்ளனர் என்றும் இரண்டு லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அரசின் கணிப்பீடு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விபத்தினுல் பாதிக்கப்பட்ட ஐந்து லட்சம் மக்களும் உடனடியாகப் பொருளாதார உதவிகளுக்கு உரியவர்களாக இருந்தும் கடந்த ஆறு வருட காலமாக எந்தவித நட்டஈடோ, உதவியோ வழங்கப்படவில்லை.

அதுமட்டுமன்றி போபால் விஷ வாயுவாற் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை முறைகள் பற்றி ஆராயவோ, பரீட்சார்த்தங்களை மேற்கொள்ளவோ முடியாதவாறு இந்திய அரசு அதற்குத் தடை விதித்திருந்தது.

இது தொடர்பாக இந்திய சுப்ரீம் கோர்ட் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் திட்டவட்டமான முறையில் தீர்ப்பளித்து இருந்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

மனித உரிமை மீறல் எதிர்ப்பு இயக்கங்களும், பொது நிறுவனங்களும், போபால் விஷவாயுவால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதி நிதிகளும் இதற்கெதிராகக் கடுமையான கண்டனங்களையும், எதிர்ப்புக்களையும் வெளியிட்டனர்.

இந்த எதிர்ப்புக்களையும், கண்டனங்களையும் கண்ட அரசு இப் பிரச்சினையைத் தணிப்பதற்காகவே மாதந்தோறும் இருநூறு ரூபா நட்ட ஈட்டை இம்மாதம் தொடக்கம் மூன்று வருடங்களுக்கு வழங்க முன்வந்துள்ளது

ஏறத்தாழ ஐந்து லட்சம் மக்களின் வாழ்வைப் பறித்தவர்கள் எதுவித தண்டனையோ, நட்டமோ இன்றித் தப்பிக்கொள்ள, வெறும் இருநூறு ரூபாவைக் காட்டி இந்த மக்களை ஏமாற்ற முயல்கிறது இந்திய அரசு.

இந்த போபால் விஷ வாயுவால் முற்றுகப் பாதிக்கப்பட்ட, தனது முடிவைப்பற்றி நன்கு தெரிந்த நிலோபர் என்ற சிறுமி கூறுகிருள். ''நான் டாக்டராகி இலவசமாக எல்லோருக்கும் மருத்துவம் பார்ப்பேன் எனக்கு வேண்டியதெல்லாம் நல்ல வீடு...... நல்ல மைதானம்...... நல்ல மரங்கள்...... நிறையப் பூக்கள்.''

அமெரிக்கா, ரசாயன ஆயுதம் தயாரிக்க நடாத்திய ஒத்திகைதான் போபால் துயரம்! அதற்கு ஒத்துழைத்தது இந்திய அரசு! இதில் நிலோபர் போன்ற லட்சக் கணக்கான குழந்தைகளின் கனவுகள் எல்லாம் வெறும் குமிழிகளாகச் சிதறுகின்றன.

இந்த இருநூறு ரூபா, இழந்து கொண்டிருக்கும் அவர்களது வாழ்க்கையைப் பெற்றுக் கொடுக்குமா?

# இதயநாதம்

புதன்கிழமை 14 — 03 — 1990

நல்வாக்கு

*பரிசுத்தமான மனத்தை உடையவர்கள் பேசும் கடுமையான வார்த்தையும் நன்மையே தரும். கெட்ட எண்ணம் உள்ளவர்கள் இனிய வார்த்தை பேசினுலும் அதனுல் துன்பமே உண்டாகும்.*

-நன்னெறி

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

தமிழக சஞ்சிகை நக்கீரன் தரும் தகவல்

# புலிகள் புடைசூழ பகிரங்க மேடைக்குவருவார் பிரபாகரன்

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கிருரா? இல்லையா? என்ற கேள்வி, இலங்கையில் தமிழர்கள் வாழும் வடகிழக்கு மாகாணத்தில் விவாதத்திற்குரியதே இல்லை... காரணம் விடுதலைப்புலிகள் நடத்தும் ஈழவிடுதலைப் போராட்டத்தில் ரத்தமும் சதையுமாய் பங்கேற்று வரும் ஈழமக்கள், தினமும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பிரபாகரனேடு தொடர்பு கொண்டிருக்கிருர்கள். அவரது இருப்பை அறிந்திருக்கிருர்கள். அவர் வகுக்கும் திட்டங்களை உடனுக்குடன் செயல்படுத்தியும் வருகிருர்கள். எனவே பிரபாகரன் இருக்கிருரா இல்லையா? என்று விசாரிப்பது அவர்களைப் பொறுத்தவரை தேவையில்லாமல்கோபத்தைத் தூண்டும் அர்த்தமற்ற கேள்வியாகவே இருக்கின்றது

ஆனுல் ஈழத்துக்கு வெளியே குறிப்பாகத் தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் போராட்ட உணர்வை உணர்ச்சி பூர்வமாக பகிர்ந்து கொள்ளாமல் வெறுமனே வேடிக்கை பார்ப்பவர்களும் அப்போராட்டம் கண்டு அசூசைப் படுகிறவர்களும்தான இப்படியொரு கேள்வியை எழுப்பி பிரபாகரன் உயிருடன் இல்லையோ என்ற சந்தேகத்தைத் தோற்றுவித்து வீண் பிரச்சினையைக் கிளப்பிக் கொண்டே இருக்கிருர்கள்.

பிரபாகரனை மாத்தயா சுட்டுக் கொன்று விட்டதாகக் கதை கட்டிவிட்ட இந்திய உளவுத்துறை அதிகாரிகளே தங்கள் பொய்யைத் தூக்கி நிறுத்த முடியாமல் ஜகா வாங்கிக் கொண்டனர். ஆனுல் அந்த அதிகாரிகளின் ஊதுகுழல்களாயிருந்த பத்திரிகைகள் பட்டும் இன்னும் பிரபாகரன் பற்றி பூடகமாகவே புரளியைக் கிளப்பிகொண்டுதானிருக்கின்றன,

இந்தப் பூடகப் புரளிக்கும் சர்ச்சைக்கும் பெரிய முற்றுப்புள்ளிவைக்கும் வகையில் மேடைக்கு வருகிருர் பிரபாகரன்!

கடந்த இரண்டரை ஆண்டுகளாக வவுனியாக் காட்டில் தலைமறைவாக இருந்து கொண்டு இந்திய ராணுவத்துக்குப் பெரும் சவால்விட்டு தமிழீழ விடுதலைப் புலிகளைத் திறம்பட இயக்கி வந்த பிரபாகரன் விரைவில் இந்திய ராணுவம் முழுமையாக வெளியேறியவுடன் வெற்றித் தளபதியாக வெளியே வந்து மக்கள் முன் தோற்றுவார் என்ற செய்தி யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கெங்கும் பரவி மகிழ்ச்சிப் பெருக்கை ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கமும் இந்த இயக்கத்தின் அரசியல் கட்சியான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் யோகியும் இதை உறுதிப்படுத்தியுள்ளனர். பிரபாகரன் விரைவில் பொதுமேடைக்கு வர முடிவு செய்திருக்கும் செய்தி 'முரசொலி' போன்ற ஈழத் தமிழ் நாளிதழ்களின் தலைப்புச் செய்தியாகக் கடந்த வாரம் பரபரப்புடன் வெளியாகியிருக்கின்றது.

பிரபாகரன் கலந்து கொள்ளும் இப்பொதுக் கூட்டத்தை நடத்துவதற்கான இடமும் தேர்வு செய்யப்பட்டு விட்டது. யாழ்ப்பாண மாவட்டம் சுதுமலையிலுள்ள அம்மன் கோயிலுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சென்டிமென்டாக நெருங்கிய தொடர்பு உண்டு. விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் திருப்புமுனையை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் இந்த அம்மன் கோவிலில்தான் நடைபெற்றிருக்கின்றன. ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன் 23. 7. 87 அன்று சுதுமலை அம்மன் கோயிலடியிலிருந்துதான் இந்திய ராணுவ ஹெலிகொப்டர் மூலம் பிரபாகரன் டில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். டில்லியில் ஒரு ஹோட்டலில் பிரபாகரன் சிறை வைக்கப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்து ஈழமக்கள் தன்னெழுச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து 3. 8. 87 அன்று இந்தியப்படையினர் திரும்பப் பிரபாகரனைக் கொண்டுவந்து விட்ட இடமும் இந்தக் கோவில் மைதானம்தான்.

மறுநாள் 4- 3- 87 அன்று விடுதலைப்புலிகளின் சரித்திர



முக்கியத்துவம் வாய்ந்த பொதுக்கூட்டம் இந்த அம்மன் கோவில் மைதானத்திலேயே நடைபெற்றது. அக்கூட்டத்தில் கலந்துகொண்டு இந்திய- இலங்கை ஒப்பந்தம் பற்றிப் பேசிய பிரபாகரன் ''ஈழத்தமிழர் ஒவ்வொருவரின் உயிர்ப்பாதுகாப்புக்கும் இனி இந்தியாவே பொறுப்பு. இக்கடமையை இந்தியா சரிவரச் செய்யத் தவறினுல் தாங்கள் மீண்டும் ஆயுதம் ஏந்துவோம்'' என்று பிரகடனம் செய்தார்.

அதன் பிறகு பிரபாகரன் எந்தப் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்ளவில்லை. இதனுல்தான் வவுனியாக் காட்டிலிருந்து வெளியே வந்ததும் தான் பேசுகிற முதற் பொதுக் கூட்டம் சுதுமலை அம்மன் கோவில் மைதானத்தில் நடைபெறவேண்டும் என்று பிரபாகரன் விருப்பம் தெரிவித்துள்ளார். உரிய ஏற்பாடுகளை விடுதலைப்புலிகள் செய்துவருகிருர்கள்.

பிரபாகரன் விரைவில் மக்கள் முன்தோன்றுவது ''நான் உயிருடன் தான் இருக்கிறேன் [illegible]'' என்பதற்காக அல்ல! மாருக, அவர் பொதுமேடையில் தோன்றுவது இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும் விடுதலைப்புலிகளுக்குக் கிடைத்துள்ள முக்கிய வெற்றியின் அடையாளமாகும்.!

பிரபாகரனின் ஆட்சேபத்தைப் பொருட்படுத்தாமல் ஜெயவர்த்தனவின் அழைப்பின் பெயரில் ஈழத்துக்கு வந்த இந்திய இராணுவத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே கடந்த இரண்டரை ஆண்டுகளாகக் கடும் யுத்தம் நடந்தது 'பிரபாகரனைப் பிடிக்கவேண்டும், விடுதலைப் புலிகள் இயக்கம் என்றெரு அமைப்பே இல்லாதவாறு அழித்தொழித்திட வேண்டும்' என்று கங்கணம் கட்டிக் கொண்டு இந்திய இராணுவம் மூர்க்கமாகச் செயலில் இறங்கியது இதைச் சவாலாக ஏற்றுக்கொண்ட விடுதலைப்புலிகள் தீவிரமாகப் போராடி அதிரடி கொடுத்தார்கள்.

நினைத்ததைச் சாதிக்கமுடியாத இந்திய இராணுவம் இதற்கு மேலும் பெயரைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம் என்ற எண்ணத்தில் ஈழத்திலிருந்து மார்ச் 31-ந் தேதிக்குள் முழுமையாக வாபஸாகி விடுவதாக அறிவித்திருக்கிறது விடுதலைப்புலிகளுக்குக் கிடைத்திருக்கும் முக்கிய வெற்றி இது

இப்போது இந்தியப்படை முற்றுக வாபஸாகிக்கொண்டிருப்பதால் பெருமாள் அரசு சுத்தமாகச் செயலிழந்து முடங்கிக் கிடக்கிறது. செயற்படாத இந்த அரசை நீக்கி விட்டுப் புதிதாகத் தேர்தல் நடத்தவேண்டும் என்ற கோரிக்கை வடகிழக்கு மாகாணத்தில் ஓங்கி ஒலித்து வருகிறது. இது விடுதலைப்புலிகளுக்குக் கிடைத்த இன்னெரு வெற்றியாகும்.

இந்தியப்படை வாபஸானுல் பெருமாளையும், அவரது கோஷ்டியினரையும்பாதுகாத்துக் கொண்டு விடுதலைப்புலிகளோடு தொடர்ந்து யுத்தம் புரிந்து கொண்டிருப்பதாகப் பெருமாளின் கட்டுப்பாட்டின் கீழ் தமிழ்த்தேசிய இராணுவம் என்ற படையைச் சில மாதங்களுக்கு முன் இந்திய அதிகாரிகள் உருவாக்கினுர்கள். இவர்களுக்கு இந்திய இராணுவம் பயிற்சி கொடுத்தார்கள்.

இந்திய அமைதிப்படையின் கள்ளக் குழந்தையான தமிழ் தேசிய ராணுவம் இருக்கும் வரை ஈழ மண்ணில் சகோதர யுத்தம் (?) நிற்காதுஎன்பதை உணர்த்த விடுதலைப்புலிகள் அவர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறித்து நிராயுதபாணியாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்ருர்கள். ஏற்கனவே நிர்ப்பந்தத்தின் பேரில் தமிழ் தேசிய ராணுவத்தில் சேர்ந்த இளைஞர்கள் விடுதலைப்புலிகள் எடுத்துவரும் நடவடிக்கையால் தைரியமாக இப்போது வெளியேவந்து ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு கும்பல் கும்பலாக சரணடைந்து கொண்டிருக்கிருர்கள். இப்போது ஈழத்தமிழர்கள் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் சகஜ வாழ்க்கை மேற்கொண்டிருக்கிருர்கள்.

யாழ்ப்பாணவாசிகள் வெகு காலத்திற்குப்பிறகு இப்போதுதான் தாங்களே தங்கள் ஊரைச்சுற்றிப் பார்க்க முடிந்திருப்பதாகக் கூறுகிருர்கள். தமிழர்களுக்கே உரித்தான 'ஜல்லிக்கட்டு' சமீபத்தில் கிளிநொச்சியில் உற்சாகமாக நடாத்தப்பட்டது. ஈழமக்கள் பயமின்றி மீண்டும் தங்கள் வேலைக்குப் போய்வரத் தொடங்கியிருக்கிருர்கள். இப்படி விடுதலைப்புலிகள் இயக்கம் ஈழத்தமிழர்களின் பாதுகாவலனுகவும் ஏகப் பிரதிநிதியாகவும் முழுமையாக வளர்ச்சியடைந்திருப்பது அந்த இயக்கத்துக்குக்கிடைத்த இன்னெரு வெற்றியாகும்.

(5- ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு புதிய வரிப்புலி சீருடை

விடுதலைப்புலிகள் தற்பொழுது அணியும்புதிய சீருடைக்கான டிசைனைத் திரு பிரபாகரன்தானே தேர்ந்தெடுத்தார். அவர் 'ஓகே' செய்த வரிவரியாக வரிப் புலிபோல் காட்சிதரும் டிசைனையுடைய சீருடையையே புலிகள் தற்பொழுது அணிந்துவருகின்றனர் தைமாதம் முதல் இப்புதிய சீருடை அமுலுக்கு வந்துள்ளது. புதிய சீருடைக்கு வந்தவுடன் மாத்தயாவை பிரபாகரன் தன்னிடம் வரவழைத்து இருவரும் புதிய சீருடை அணிந்து புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். இந்தப்புதிய சீருடை அணிந்த விடுதலைப்புலிகள் புடைசூழ விரைவில் பொதுக்கூட்டத்திற்கு வருவார் பிரபாகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்மைச் சுற்றி நடப்பவை

நகரை அண்டியுள்ள பாடசாலையொன்றில் அடிக்கடி தளபாடங்களும், கட்டிட உபகரணங்களும் மர்மமான முறையில் சேதமாக்கப்பட்டு வருவதாக எமக்குச் செய்தி கிடைத்தது.

சிறிது காலமாக மர்மமான முறையிற் தொடர்ந்து இடம்பெறும் இந்த 'வன்செயல்' பற்றி நாம் விசாரித்ததிலிருந்து;

★ அதிபருக்கும், அங்குள்ள ஆசிரியர் சிலருக்குமிடையே உருவாகியுள்ள கருத்துவேறுபாடுகளின் விளைவே இந்த வன்செயலாம்.

✶ இதனால் அப்பாடசாலையில் அதிபருக்கு விசுவாசமான ஆசிரியர்குழு, எதிரான ஆசிரியர்குழு என இரு அணிகள் தற்பொழுது 'தீவிரமாக' செயற்பட்டு வருகின்றனவாம்.

✶ அதிபருக்கு எதிரான அணியினர் அங்கு பயிலும் தமக்கு 'விசுவாசமான' மாணவர்களின் உதவியுடனேயே இந்த 'உள்வீட்டு வன்செயலை' மேற்கொண்டு வருகின்றனராம்.

✶ இதில் விசேடமென்னவென்றால் கல்விப்பகுதி அலுவலகத்திற்கு அயல் வீடான இப்பாடசாலையில் நடைபெறும் இந்தச் சம்பவம் பற்றி எந்தவித ஒழுங்கு நடவடிக்கையும் இதுவரை இல்லையாம் காரணம்... அதிபருக்கு எதிரான குழுவுக்குக் கல்விப்பகுதி முக்கிய புள்ளிகள் சிலரின் மனப்பூர்வ ஆதரவும், ஆசியும் உண்டாம்.

போகிற போக்கைப்பார்த்தால் நமது கல்வி...... எங்கு போய் நிற்குமோ?

✶ கிறிசன்

# கிளிநொச்சியில் கிராமவீதிகள், பாலங்கள் யூ. எஸ். உதவியுடன் திருத்தப்படுகின்றன

(கிளிநொச்சி)

அமெரிக்க யூ. எஸ். நிதி நிறுவன உதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல கிராம வீதிகள், நீர்ப்பாசன மதகுகள் என்பன தற்பொழுது திருத்தப்பட்டு வருகின்றன.

சுமார் இருபது லட்சப் ரூபா செலவில் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மேற்பார்வையில், இத்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜெட்ரிக்கோ வீதி, அக்கராயன் குளம் வலதுகரை வீதி, றேஸ் வீதி, யூனியன் குளம் வாய்க்கால், பரவிப்பாஞ்சான் பிரதான பாலம், கிளிநொச்சிக்குள பிரதானபாலம்-தண்ணீர் திறந்துவிடும் துரிசு என்பனவே தற்பொழுது இத்திட்டத்தின் கீழ் திருத்தப்படுகின்றன.

இவை கடந்த பத்துவருடங்களாகத் திருத்தப்படாமல் மிகவும்சேதமடைந்த நிலையிலுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# யாழ். இந்து அதிபரின் இடமாற்றத்தை ரத்துச்செய்ய பல அமைப்புக்கள் கோரிக்கை

'கல்வித்துறையிலும் பிற நடவடிக்கைகளிலும் பீடு நடை போடுவதற்குக்காரணமாகவிருந்த ஒருவரை திடீரென இடமாற்றம் செய்ததற்கான காரணத்தை ஊகிக்கக்கூட முடியாமலிருக்கின்றது. முன் விசாரணைகள் ஏதும் இல்லாதிருப்பது ஒருஒழுங்கு நடவடிக்கையெனக் கொள்ளவும் முடியாமலிருக்கின்றது.'

இவ்வாறு யாழ் இந்துக் கல்லூரி அதிபரின் திடீர் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கோரி மேற்படிகல்லூரி ஆரம்ப பாடசாலை பெற்றோர் சங்கம், பழைய மாணவர்கள் ஆகியோர் தேசிய பாடசாலைகள் செயலாளருக்கும், கல்வி அமைச்சின் செயலாளருக்கும் யாழ். பிரதிக்கல்விப் பணிப்பாளருக்கும், ஜனாதிபதிக்கும் அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'கல்லூரி நூற்றாண்டு விழாவை எடுக்கும் வேளையில் இத்தகையதொரு மாற்றம் செய்யப்பட்டிருப்பதுமனவருத்தத்திற்குரியது. இவ் அதிபர் இக் கல்லூரியில் ஒரு தசாப்தத்திற்கு மேலாக ஆசிரியராகப் பணிபுரிந்தவர், கல்லூரியின் பின்னணியை நன்கு தெரிந்தவராகையால் நூற்றாண்டு விழாவை நடாத்த இவரே மிகுந்த தகுதியுடையவராகின்றார்' எனவும் இவ் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முகமாலை அதிபராக நியமனம்

கிளாலி றோ.க.த.க. வித்தியாலயத்தில் கடந்த எட்டு வருடங்களாக உப அதிபராகக் கடமையாற்றிய அ.ஞானசோதி அவர்கள் கடந்தமாதம் தொடக்கம் பதவி உயர்வு பெற்று முகமாலை றோ.க.த.க வித்தியாலயத்தில் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (18)

## சீருடைகள் இதுவரை இல்லை

வலி. தென் மேற்குப் பிரதேச சபையின் உப அலுவலகங்களிற் கடமையாற்றும் ஊழியர்களுக்குக் கடந்த 1989-ம் வருடத்திற்கான சீருடைகள் இதுவரை வழங்கப்படவில்லை.

மானிப்பாய் பட்டின உப அலுவலகம், மானிப்பாய் கிராம உப அலுவலகம், பண்டத்தரிப்புப் பட்டின உப அலுவலகம், பண்டத்தரிப்புக் கிராம உப அலுவலகம் ஆகியவற்றிற் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள், காவலாளிகள், சுகாதாரத் தொழிலாளர்கள், மின்சார ஊழியர்கள் ஆகியோருக்கே கடந்த ஆண்டுக்கான சீருடைகள் இதுவரை வழங்கப்படவில்லை. (13)

## உடல் நிலை தேற்றம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் வரணியில் நிகழ்ந்த வான் விபத்தில் காயமடைந்து யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் தென்மராட்சிப்பொறுப்பாளர் எஸ் பி கே. பாப்பா உடல் நிலை தேறி ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறியுள்ளார்.

# வல்வை வீடுகளிலிருந்து இராணுவம் வெளியேறியது

வல்வையில் மக்கள் குடியிருப்புக்களில் குடியிருந்த இலங்கை இராணுவத்தினர் தற்பொழுது அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

1987 ஆம் ஆண்டு இந்த குடியிருப்புக்களை இலங்கை இராணுவத்தினர் தமதுமுகாம்களாக மாற்றியிருந்தனர்.

இதனால் இந்தியஇராணுவத்தினர் வெளியேறிய பின்னரும் வல்வைப்பகுதி மக்கள் தமது வீடுகளுக்குத்திரும்ப முடியாத நிலையிலிருந்து வந்தது.

வல்வைப் பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு இவ்விடயத்தை சுட்டிக் காட்டியதையடுத்து இந்த வீடுகள் தற்பொழுது குடியிருப்பாளர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன. (39)

## பரீட்சையில் சித்தி

கடந்த ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசுப் பரீட்சையில் யாழ் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த சுமித்திரா சண்முகநாதன், அ. அருட்குமரன் ஆகிய இரண்டு மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.

## வேலணையில் சுகாதார கருத்தரங்கு

வேலணை தெற்கு துறையூர் பகுதியில்சுகாதாரத்தொண்டர்களுக்கான கருத்தரங்கொன்று நடைபெற்றது.மதுஒழிப்பு மதுவின் தீமை போதைவஸ்து பாவனைதடுத்தல்என்பன பற்றி சுகாதார போதனாசிரியர்களினாலும் சுகாதார உத்தியோகத்தர்களினாலும் கருத்தரங்கில் விளக்கவுரை வழங்கப்பட்டது. (24)

## மன்னாரில் விளையாட்டுப் போட்டி

மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது பிரதம விருந்தினராகமன்னார் பிரதேசக் கல்விப் பணிப்பாளர்கள் திரு ஆர் சுந்தரலிங்கம் கலந்து கொண்டார் இப் போட்டியில் பாரதி இல்லம் 210½ புள்ளிகளைப்பெற்று முதலாம் இடத்தையும் வள்ளுவர் இல்லம் 203½புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் இளங்கோ இல்லம் 179½ புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும்பெற்றுக் கொண்டது.

## ஆசிரியர் நியமனம்

அண்மையில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களில் 11 பேர் வடமராட்சி கிழக்குப்பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்

வடமராட்சிகோட்டக்கல்வி அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்ட 21 பட்டதாரி ஆசிரியர்களில் 11 பேர் கிழக்குப்பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகத்தில் உதவிக் கல்விப்பணிப்பாளர் பொ. வீரபத்திரனின் முயற்சியினாலேயே இப்பட்டதாரி ஆசிரியர்கள் இப்பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இதில் வடமராட்சி கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள நாகர் கோவில் கொத்தணிக்கு 3 பட்டதாரி ஆசிரியர்களும் உடுத்துறை கொத்தணிக்கு 8 பட்டதாரி ஆசிரியர்களும் நியமிக்கப் பட்டுள்ளார்கள். (43)

## சுவையான செய்திகள்

### தொப்பூழ்க் கொடி சும்மா எதற்கு?

அமெரிக்காவின் ஃப்ளோறிடா நகரில் உள்ள முப்பத்தியிரண்டு வயதுப்பெண்ணுக்கு அண்மையிற்பதினெட்டு மாதச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எதற்காகத் தெரியுமா? தன்னுடைய குழந்தையின் தொப்பூழ்க் கொடியிற் போதை மருந்தை மறைத்து வைத்துக் கடத்திய குற்றத்திற்காகத் தான். இப்படி நடப்பதுஇதுதான் முதல்முறை என்பதாற் பதினெட்டுமாதங்கள் தண்டனை இனி இப்படி யாராவது செய்தால் வழக்கம்போல் மரண தண்டனை தானாம். போதை மருந்துக்கள் தூணிலுங் கடத்தப்படலாம்; துரும்பிலுங் கடத்தப்படலாம்; இப்போது தொப்பூழ்க் கொடியிலுங்கடத்தப்படலாம்என்ற நிலைக்கு உயர்ந்திருக்கிறது அடடா! என்னவொரு 'முன்னேற்றம்!'' இணையில்லா''நாகரிகம்!''

### சீனுக்காரரை மிஞ்சுகிறார் இந்த இங்கிலாந்து டாக்டர்

இங்கிலாந்து நாட்டில் ஒருவர் திடீரென்று பேசும் சக்தியை இழந்து விட்டார். உடனே பாம்பின் விஷத்தை ஊசி மூலம் செலுத்திப் பேசவைக்கும் முயற்சியைலண்டன் டாக்டர் ஜெறேல்ற்ப்றாக்ஸ்என்பவர்மேற்கொண்டார். பலன் தெரிகிறதாம். இதில் முழுவெற்றி பெறமுடியும் என்று இந்த டாக்டர் நம்புகிறார். ''பாம்பென்றாற் படையும் நடுங்கும்.'' என்பது மாறிப்;''பாம்பென்றாற் பேச்சும் வரும்'' எனக் கூறினால் என்ன?

## முரசொலிக்கு வந்த கடிதம்

### யாழ், ரயில் பயணிகளுக்கு முன்னைய வசதிகள் கிட்டுமா?

ஆசிரியர்,
முரசொலி,

பல வருடங்களின் பின்னர் தற்பொழுது மீண்டும் யாழ்ப்பாணத்திற்கான தபால் ரயில், இன்ரசிற்றி ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன அத்துடன் யாழ்தேவி ரயில் சேவையும் தடையின்றி நடைபெற்று வருகின்றது எனினும் கடந்த கால சம்பவங்களினால் இங்குள்ள பல புகையிரத நிலையங்கள் பல சீரழிந்து. பிரயாணிகளுக்குரிய வசதிகள் அற்ற நிலையில் அவை தற்பொழுது அரைகுறையாகச் செயற்பட்டுவருகின்றன. யாழ். மாவட்டத்திலுள்ள அநேகமான நிலையங்களில் புகையிரத நிலையத்தின் (இடத்தின்) பெயரைக் குறிக்கும் அறிவித்தல் பலகைகளில் எழுத்துக்கள் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. அத்துடன் பல புகையிரத நிலையங்களில் புகையிர மேடைகளுக்கு மின்விளக்குகள் மீண்டும் பொருத்தப்படாததினால் அவை இருளில் மூழ்கிக் கிடக்கின்றன. இவை தவிர வேறு சில புகையிரத நிலையங்களில் புகையிரதமேடைகளில் புல், முள் போன்றவை வளர்ந்து பிரயாணிகளுக்கு தொல்லை கொடுக்கின்றன. சில நிலையங்களில் பிரயாணிகள் அமருவதற்கு இருக்கை வசதிகள் கிடையா. இக்குறைபாடுகளை கூடிய விரைவில் தீர்த்து, பிரயாணிகளுக்கு மீண்டும் முன்னைய வசதிகள் கிட்ட புகையிரத திணைக்களத்தின் யாழ். வேலைப்பகுதி அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டுமென பிரயாணிகளின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்,

கொடிகாமம் எஸ். சுப்பிரமணியம்

### பிரசவ லீவு வழங்குவதில் ஏன் இந்த வேறுபாடு?

ஆசிரியர்
முரசொலி

அரச, கூட்டுத்தாபனமொன்றில் கடமையாற்றும் பெண் ஊழியர் ஒருவருக்குப் பிரசவ லீவாக ஆறு கிழமைகளே இதுவரை வழங்கப்பட்டு வந்தது. அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல 22/ 89 இன்படி ஒருசில பிரிவினருக்குப் பன்னிரண்டு வார கால விடுமுறையும், சில பிரிவினருக்கு முன்னைரைப்போல ஆறுவார விடுமுறையும் வழங்க முடியும். இப்பிரிவில் ஆசிரியர், தற்காலிக உத்தியோகத்தர், நாட்சம்பள உத்தியோகத்தர்,அமையஉத்தியோகத்தர்,சிறு[illegible]ணிபாளர் ஆகியோர் அடங்குவர். அரசாங்கம் இவ்விடயத்தில் சரியான முடிவை எடுக்காததையிட்டு இவ்வூழியர்கள் மத்தியில் விரக்தி ஏற்பட்டுள்ளது. இவ்வேறுபாட்டைக் கவனித்து உரிய நடவடிக்கை எடுக்க அரசாங்நிர்வாக, மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு முன்வருமா?

தொல்புரம் கிழக்கு. தி. உதயசூரியன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஜம்மு-காஷ்மீர் விவகாரம் தொடர்பான

# இந்திய - பாக் நிலையில் புதியதோர் திருப்பம்!

(இஸ்லாமாபாத்)

ஜம்மு- காஷ்மீர் பிரச்சினை தொடர்பான இந்திய- பாகிஸ்தான் இழுபறியில் புதிய திருப்பம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இவ்விவகாரத்தில் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளை இந்தியாவுடன் நடத்தத்தான் தயாராக இருப்பதாகப் பாகிஸ்தான் பிரதம மந்திரி பெனாஸிர் பூட்டோ அறிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக அவர் அரசியல் கட்சித்தலைவர்களுடன் கலந்தாலோசனை நடத்திய வேளை இவ்வறிவிப்பு வெளியிடப்பட்டது.

''காஷ்மீர் இந்திய எல்லைக்குட்பட்ட பிரதேசம், இதில் பாகிஸ்தான் தலையிடு செய்வது பெருந்தவறு'' என்று இந்தியா வன்மையாகக் கண்டித்துவரும் இத் தருணத்தில் பாகிஸ்தான் பிரதமரின் இவ்வறிவிப்புப் புதிய திருப்பத்தை உருவாக்க வழிகோலலாமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

தனிநாடு கோரிப் போராடும் கிளர்ச்சிக்காரர்களின் மோதல்களினால் ஜம்மு-காஷ்மீரில் இதுவரைப் பெருந்தொகையானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இங்குள்ள ஜனத்தொகை ஒருகோடியே இருபது இலட்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய நிகழ்ச்சிகள்

### யாழ் இந்துவில்

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி இன்று காலை யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு.மு திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறும் (40)

### கொடிகாமத்தில்

கொடிகாமம்திருநாவுக்கரசு மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி இன்று பி.ப. இரண்டு மணிக்கு கொத்தணி அதிபர் திரு ச, சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும் [40]

### காங்கேசனில்

(கைத்தெழில் பொதுத் தொழிலாளர் லங்கா. சிமேந்து நிறுவனக் கிளையின் 2 வது பொதுக் கூட்டம் லங்கா சிமெந்து நிறுவன மின் வலுநிலைய மண்டபத்தில் தலைவர் எஸ். கே. ஜோதிபாலதலைமையில் இன்று புதன்கிழமைகாலை9.00 மணிக் நடைபெறும்.

### குருநகரில்

யாழ்.நகர் தெற்கு கொத்தணியின் தமிழ்தின விழா இன்று பி.ப. இரண்டுமணிக்கு குருநகர் சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் கொத்தணி அதிபர் திரு ஜி பி ஆல்பிரட் தலைமையில் நடைபெறும் (40)

### கிளிநொச்சியில்

கிளிநொச்சி, காணிமாவட்டப் பதிவகம்,திறப்புவிழா இன்று புதன் கிழமை காலை பத்துமணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட பதிவாளருமான க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும். கிளி மேலதிக மாவட்ட பதிவாளர் சொ. அமிர்தலிங்கம் விவாக, பிறப்பு இறப்பு பதிவேட்டை ஆரம்பித்து வைப்பார். மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. குணராசா காணிப்பதிவேட்டை ஆரம்பித்து வைப்பர்.வரவேற்புரையை மேலதிக மாவட்ட பதிவாளர் க இராசதுரையும் நன்றியுரையை பிரம்மஸ்ரீ ந.சதாசிவ ஐயரும் நிகழ்த்துவார்கள்.

### சித்தன்கேணியில்

சித்தன்கேணி கணேச வித்தியாலயவருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமைபிற்பகல் 1-30க்கு சித்தன்கேணி மகா கணபதிப் பிள்ளையார் கோவில் வீதியில் வித்தியாலய அதிபர் க நல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது பண்டத்தரிப்பு கல்விக் கோட்டக் கல்வி அதிகாரி கே. மகேசன் பிரதம விருந்தினராகவும் சித்தன்கேணி சிவகாமி சமேத சிவசிதம்பரேஸ்வரர் கோவில்பரிபாலன சபை தலைவர் சட்டத்தரணிஎம். கே.சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். சித்தன்கேணி மாதர் சங்கத் தலைவி திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம் பரிசு பெற்றோருக்கான பரிசில்களை வழங்குவார். (12)

வெளியுறவு அமைச்சு அறிவிப்பு

# இலங்கைக்கு மாறான செயலில் பாரத மண்ணில் இடமில்லை

(புதுடில்லி)

இலங்கைக்கு எதிரான எந்தவிதச் செயல்களுக்கும் தமது நாடு பயன் படுத்தப்படுவதை பாரதம் ஒருபோதும் அனுமதிக்காது என்பதை திட்டவட்டமாக எடுத்துரைத்துள்ளது.

எந்தப் போராளிகள் குழுவாக இருப்பினும் இலங்கைக்கு விரோதமான செயல்களுக்கு பாரத மண்ணைப் பயன்படுத்திக் கொள்வதை பாரதம் அனுமதிக்காது என்பதை பாரத வெளியுறவு அமைச்சகச் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

இலங்கையில் இருந்து இம் மாதக் கடைசியில் அமைதிப் படைமுழுமையாகவிலகியபின்னர் தமது உயிர்களுக்கு அபாயம் ஏற்படுமென அச்சம் கொண்டுள்ள வட கிழக்கு மாகாண சபை அதிகாரிகளும் இவர்களில் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் இயல்பு நிலை திரும்பிதங்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் என்று நம்பிக்கை ஏற்பட்டவுடன் இவர்கள் நாடுதிரும்பபாரதம் ஊக்கமளிக்கும் என்றும் இவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளுமான குடும்பங்கள் என்றும் தமிழ்நாட்டின் சட்டம்,ஒழுங்கு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டே தமிழ் நாட்டிற்கு வெளியே இந்த அகதிகளைத் தங்க வைக்கத் தீர்மானிக்கப்பட்டதாகவும தெரிவிக்கப்பட்டது.

### சிவாஜிகோரிக்கை

தமிழ் நாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய பல்வேறு ரயில் பாதைத்திட்டங்களுக்கும் சென்னை நகரின் விரைவு ரயில்போக்குவரத்துத் திட்டத்தின் கீழ் அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று தமிழ் நாடு ஜனதாதள் தலைவர் திரு சிவாஜிகணேசன் ரயில்வே அமைச்சர் திரு,ஜோர்ஜ்பெர்ணண்டவைக் கொண்டுள்ளார்.

### புதிய பொறுப்பு

காஷ்மீர் விவகாரங்கள் தொடர்பான அமைச்சராக ரயில்வே அமைச்சர் திரு. ஜோர்ச் பெர்ணண்டஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு உதவியாக ஆலோசனைக் கமிட்டி ஒன்றும் நியமிக்கப் பட்டுள்ளது.

## இன்று நாள் எப்படி?

மேடம்: சத்துருபயம், இடமாற்றம், பண நஷ்டம், வாகன சுகம், தேடியவர் வருகை புதுத்தொழில்.

இடபம்: உயர்பதவி, சகோதர வழியுதவி, மனையில் சுபகாரியம், தூரத்துப்பிரயாணம், வணிகர்கள் இலாபம்.

மிதுனம்: விவாகத்தடை, வீண் அலைச்சல், இனப்பகை, தடைப்பட்ட பணவரவு, இயந்திரத் தொழில் கடற்தொழில் முலம் இலாபம்.

கடகம்: பணவரவு, காதலர் மகிழ்ச்சி, உயர்பதவி, உத்தமர்களுறவு, இராஜமரியாதை, புதுத்தொழில, வாகனுதிகள் போகம்.

சிங்கம்: வாக்குப்பலிதம், வாகனசுகம், தூரத்துச்செய்தியால் நன்மை, விவாகநிச்சயம், புதுத்தொழில்.

கன்னி: புகழ் தேடிவரும், பெண்களாற்கவலை, மாமன் வழி யுதவி, வாகனமாற்றம், சகோதரவழி யுதவி.

துலாம்: வீண்விரயம், திருடர் பயம், தேடியவர் வருகை, தூரத்துப் பிரயாணத்தடை, வணிகர்கள் இலாபம்,

விருச்சிகம்: உயர்பதவி, தொழில் விருத்தி, பெண்களாற் சுகம், பணவரவு, வாகனசுகம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

தனுசு: உயர்பதவி, இராஜ மரியாதை, வாகனசுகம், இளையசகோதர வழியுதவி, புதுத்தொழில், பணவரவு வணிகர்கள் இலாபம்.

மகரம்: விவாக நிச்சயம், தேடியவர் வருகை, விருந்துபசாரம், இயந்திரத்தொழில் கடற்தொழில் செய்வோர் அகமகிழ்ச்சி.

கும்பம்: வாக்குக்கலகம், உடல் ஒட்டிய ரோகம், வாகனமாற்றம், தூரத்துப் பிரயாண நிறைவு, வணிகர்கள் இலாபம்.

மீனம்: விவாக நிச்சயம், உயர்பதவி, பணவரவு, இலட்சுமி கடாச்சம், எண்ணியது நடக்கும்.

யாழ். சோதிடர்
ச அரியநாயகம்

## விளையாட்டுச் செய்திகள்

### வவுனியாவில் புதுவருட போட்டி

(வவுனியா)

வவுனியா கலைமகள் சனசமூகநிலையம் தமிழ்சிங்கள புத்தாண்டு தினத்தை முன்னிட்டு வருடாவருடம் நடாத்திவரும் சரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியினை இவ்வருடம் நடாத்தவிருப்பதாக கலைமகள் சனசமூக நிலையத்தின் தலைவர் இ. செல்வராசா தெரிவித்துள்ளார். இச்சுற்றுப்போட்டியில் வன்னித் தேர்தல் தொகுதிக்குள் உள்ள சகல விளையாட்டுக்கழகங்களும் பங்கு பற்றலாம். 30 நிமிடநேரத்திற்குள் கூடிய புள்ளிகளை பெறும் குழுவிற்கு வெற்றி வழங்கப்படும். இச்சுற்றுப்போட்டியில் பங்கு பற்ற விரும்பும் வி. கழகங்கள் தங்கள் பெயர்களையும் விளையாடும் வீரர்களின் பெயர் கையொப்பங்களையும் பெற்று ஒவ்வொரு குழுவிற்கு உரிய விண்ணப்பப் பணம் ரூபா 30/- ஐயும் சேர்த்து எதிர்வரும் 19. 03. 90 க்கு பிந்தாமல் திரு. ஆ. சத்தியகாந்தி (செயலாளர்) 39. பி. மன்னார்வீதி- வவுனியா என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விண்ணப்பங்களை அனுப்பும் விளையாட்டுக் கழகங்களுக்கு போட்டி நடைபெறும் இடமும், திகதியும் தனித்தனியாக தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் என செயலாளர் திரு. சத்திய காந்தி அறிவித்துள்ளார். (05)

### சென் அந்தனீஸ் வெற்றி

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவினுல், பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் விளையாட்டுப் போட்டிகளின் ஓர் அங்கமாக, அன்னமயில் குருநகர்ப் பயிற்சி நிலைய மைதானத்தில் நடைபெற்ற பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டியின், இறுதி ஆட்டத்தில் பாஷையூர் சென். அந்தனீஸ் விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்து மோதிய சென் ரோக் விளையாட்டுக் கழக அணியைத் தோற்கடித்துச் சாம்பியன்பட்டத்தைச் சுவீகரித்துக்கொண்டது. (16)

### கரவை பொம்பேஸ் வெற்றி

சிவானந்த விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளின் ஓர் அங்கமாக, வல்வை விளையாட்டுக்கழக அணிக்கும், கரவை பொம்பேஸ் விளையாட்டுக் கழக அணிக்குமிடையில் சிவானந்தக் கழக விளையாட்டுத் திடலில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கரவை பொம்பேஸ் அணி இரண்டுக்குப் பூச்சியம் என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (16)

### புலிகள் புடைசூழ..

(3- ஆம் பக்கத் தொடர்)

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவை எந்த நிபந்தனையுமின்றி அரசியல் கட்சியாக இலங்கை அரசு அங்கீகரித்துள்ளது தற்காலிக ஏற்பாடாக விடுதலைப் புலிகள் தேர்தலில் போட்டியிட்டு மாகாண ஆட்சியைப் பிடிக்க முடிவு செய்திருப்பது ஏன்? என்பது பற்றி இக்கூட்டத்தில் பிரபாகரன் விளக்கிக்கூறுவார்.

இக் கூட்டத்திற்கு விடுதலைப்புலிகள் அனைவரும்பழைய சீருடையில் அல்ல—புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சீருடையில்வருவார்கள் என்பது புதுத்தகவல்!

சமீபத்தில் விடுதலைப்புலிகளுக்கான சீருடையில் மாற்றம் செய்திருக்கிறார் பிரபாகரன்! இது நாள்வரை உலகெங்குமுள்ள ராணுவவீரர்களும் கெரில்லாப்போராளிகளும் களத்தில் அணியும் சீருடையை தான் விடுதலைப் புலிகளும் அணிந்து வந்தார்கள்.

இனி விடுதலைப்புலிகளுக்கென்று பிரத்தியேகமான சீருடை இருக்க வேண்டும் என்று நினைத்த பிரபாகரன் இதற்கான புதிய டிசைனை தானே தேர்வு செய்திருக்கிறார். அவர் ''ஓகே'' செய்திருப்பது வரி வரியாக வரிப்புலிபோல் காட்சிதரும் டிசைனே!

தைமாதம் முதல் இப்புதிய சீருடை [illegible] துள்ளது. புதிய சீருடை தைக்க வந்தவுடன் மாத்தையாவை பிரபாகரன் தன்னிடத்திற்கு வர வழைத்தார். இருவரும் புதிய சீருடை அணிந்து புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள் இந்தப் புதிய சீருடை அணிந்த விடுதலைப்புலிகள் புடைசூழ விரைவில் பொதுக்கூட்டத்திற்கு வருகிறார் பிரபாகரன்

பிரபாகரனைப்பற்றி புரளியைக் கிளப்பிக்கொண்டிருப்பவர்கள் அப்போது சுதுமலைக்குப் போய்ப் பார்த்துவருவது நல்லது...! (நன்றி புத்தொளி)

உதவி அரச அதிபர் உரை

### பாரம்பரியக்கலைகளைவளர்ப்பதில் மட்டு. மாவட்டம் பின்நிற்கவில்லை

பாரம்பரிய கலைகளைப் பேணிப்பாதுகாக்கும் மட்டக்களப்பு பிரதேசம் பாரத கலையை வளர்ப்பதிலும் ஏனைய பிரதேசங்களைப்போல் முன்னிலையில் திகழ்கிறது.

இவ்வாறு மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய மட்டக்களப்பு தலைமையக உதவி அரசாங்க அதிபர் இரா. நாகலிங்கம் (அன்புமணி) குறிப்பிட்டார்.

திருமதி சுபத்திரா கிருபாகரனின் மாணவிகளின் அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு கலாசார உதவிப் பணிப்பாளர் திரு. எஸ் எதிர்மனசிங்கம் தலைமை தாங்கினார்.

திரு இரா. நாகலிங்கம் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் திருமதி சுபத்திரா கிருபாகரனின் மாணவிகளின் நடன நிகழ்ச்சி தொலைக்காட்சியில் இடம் பெறும் நடன நிகழ்ச்சிகளின் முன்னணித்தரத்திற்கு வளர்ந்திருக்கிறது.

கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைதியற்ற சூழ்நிலை நிலவினாலும், கலையை வளர்ப்பதில் இப்பிரதேசம் பின் நிற்கவில்லை என்றார்.

இந்நிகழ்ச்சியின்போது மகாவித்துவான் எப் எக்ஸ். சி. நடராசா மாநகர சபை ஆணையாளர் திரு. எஸ். கார்த்திகேசு ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்நகர் கல்லூரிகளில் க.பொ.த. பரீட்சை முடிவு

நேற்று வெளியான கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சை முடிவுகளில் யாழ். நகரப்பகுதியில் யாழ். இந்துக் கல்லூரி சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியில் நான்கு மாணவர்கள் நான்கு பாடங்களிலும் ஏ எடுத்துள்ளார்கள். 3 ஏ பி மூன்று மாணவருக்கும் 2 ஏ 2 பி ஆறு மாணவருக்கும் 3 ஏ சி இரு மாணவர்களுக்கும் கிடைத்துள்ளன. அத்துடன் 131 மாணவர்கள் தகுதிப் பெறுபேறுகள் பெற்றுள்ளனர்.

வேம்படி மகளிர் கல்லூரியில் இரு மாணவிகள் நான்கு பாடங்களிலும் ஏ எடுத்துள்ளார்கள். ஏ 3 பி நான்கு மாணவிகளுக்கும் 2 ஏ பி சி இரு மாணவிகளுக்கும் கிடைத்துள்ளன. அத்துடன் 175 மாணவிகள் தகுதிப் பெறுபேறுகள் பெற்றுள்ளார்கள்

சென்ஜோண்ஸ் கல்லூரியில் இரு மாணவர்கள் நான்கு பாடங்களிலும் ஏ எடுத்துள்ளார்கள். 3 ஏ பி ஒரு மாணவருக்கும் 3 ஏ சி ஒரு மாணவருக்கும் கிடைத்துள்ளன. அத்துடன் 69 மாணவர்கள் தகுதிப் பெறுபேறுகள் பெற்றுள்ளார்கள்.

யாழ். மத்திய கல்லூரியில் ஒரு மாணவன் நான்கு பாடங்களிலும் ஏ எடுத்துள்ளார் 3 ஏ பி ஒரு மாணவனும் ஏ பி சி எஸ் ஒரு மாணவனும் பெற்றுள்ளார்கள்.

சென்பற்றிக்ஸ் கல்லூரியில் ஒரு மாணவன் நான்கு பாடங்களிலும் ஏ எடுத்துள்ளார். 2 ஏ 2 பி இரு மாணவர்களும் ஏ பி 2 சி ஒரு மாணவனும் பெற்றுள்ளார்கள். அத்துடன் 53 மாணவர்கள் தகுதிப் பெறுபேறுகள் பெற்றுள்ளார்கள்.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் 2 ஏ 2 பி இரு மாணவிகளுக்கு கிடைத்துள்ளன, அத்துடன் 95 மாணவிகளுக்குத் தகுதிப் பெறுபேறுகள் கிடைத்துள்ளன.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஏ 2 பி சி மூன்று மாணவிகளுக்கும் 3 பி சி மூன்று மாணவிகளுக்கும் ஏ பி 2 சி நான்கு மாணவிகளுக்கும் கிடைத்துள்ளன,

யாழ். ஸ்ரான்லிக் கல்லூரியில் 2 ஏ 2 சி ஒரு மாணவருக்கும் ஏ 2சி எஸ் ஒரு மாணவருக்கு கிடைத்துள்ளன அத்துடன் 69 மாணவர்கள் தகுதிப் பெறுபேறு பெற்றுள்ளார்கள், (03)

## திருமலையில் துப்பாக்கிச் சூடு

(மட்டக்களப்பு)

திருமலைப் பகுதியிலிருந்து படையினர் வெளியேறியதைத் தொடர்ந்து. படையினர் தற்போது தங்கியுள்ள துறைமுகப் பகுதியில் நேற்று துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன. (05)

## கிளிநொச்சியில் இன்று புதிய காணி அலுவலகம்

கிளிநொச்சிமாவட்ட காணிப்பதிவகம் இன்று காலை கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகரினால் திறந்து வைக்கப்படவுள்ளது இதுவரைகாலமும்இப்பதிவகம் யாழ்மாவட்ட காணிப்பதிவகத்தினுடன் இணைந்தே செயற்பட்டு வந்தது (03)

## அன்று வடமராட்சி மக்கள் ஜவான்களை வழியனுப்பவில்லை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரஜைகள் குழு பற்றிக் கொழும்பில் தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் இந்தியத் தூதராலயத்தை மேற்கோள்காட்டிவெளிவந்த செய்தியொன்றுக்கு மறுப்புத் தெரிவித்துள்ளதோடு கண்டனமும் தெரிவித்துள்ளது. இந்தியத் தூதராலயத்தைப் மேற்கோள்காட்டி "இந்தியப் படையினருக்கு வடமராட்சி மக்கள் உருக்கமான பிரியாவிடை" என்ற செய்தியே வெளியிடப்பட்டிருந்ததாகும்.

இச் செய்திபற்றி பருத்தித்துறை பிரஜைகள் குழு விடுத்துள்ள அறிக்கையின் விபரம் கீழ் வருமாறு:-

இந்தியப்படையினருக்குவடமராட்சி மக்கள் உருக்கமான பிரியாவிடை என்ற தலைப்பில் பத்திரிகைகளில் வந்த செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்பதை பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் சார்பிலும் பொது மக்களின் சார்பிலும் தெரிவித்துக் கடும் ஆட்சேபம் தெரிவிக்கின்றோம்.

உண்மைக்குப் புறம்பான அச் செய்தியில் பொதுமக்கள் வரிசையாகநின்றனர். இந்தியப்படையினருடன் வடமராட்சிப்பகுதியின் முக்கியஸ்வர்களும் பிரஜைகள் குழு அங்கத்தவர்களும் 10 கிலோ மீட்டர் தூரம் வரைபடையினருடனேயே நடந்து வடமராட்சி எல்லையைக் கடக்கும் வரை பார்த்து நின்றனர் என்று இந்தியத் தூதுவராலயத்தை மேற்கோள்காட்டி உண்மைக்குப்புறம்பான செய்திபேபரப்பப்பட்டிருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ் மாவட்டத்தில் புத்தாண்டில் நாட்டுப்பாடல் போட்டி

புத்தாண்டுத் தினத்தையொட்டி யாழ் மாவட்டத்திலும் நாட்டுப்பாடற்போட்டி நடைபெறவுள்ளது. கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு இதற்கான சுற்றுநிருபத்தை யாழ் செயலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

இன்டிப்பெண்டன் நியூஸ் பேப்பர் லிமிட்டெட் ஆதரவுடன் நடைபெறும் இப்போட்டிகள் கிராமசேவையாளர் மட்டத்தில் நடைபெற்றப்பின்னர் உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் நடைபெறவுள்ளது. இப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு விசேட பரிசில்களும் வழங்கப்படும். (03)

## தெரிவான ஆசிரியபயிலுநர்கள் கிளிநொச்சியில் நாளை நியமனம்

கிளிநொச்சி மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர் நியமனத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டோருக்கான நியமனக் கடிதங்கள் நாளை வியாழக்கிழமை வழங்கப்படவுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி, பூநகரிஉதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் நாளைக் காலை 9.00மணிக்கும் கிளிநொச்சி, கண்டாவளை உ. அ. அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் பிற்பகல் ஒருமணிக்கும் தமதுநியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்.

தெரிவுசெய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியர் பெயர் விபரம் நாளைமுதல் முரசொலியில் வெளிவரும்.

## இலங்கை அரசிற்கு இது ஒரு இறுதிச் சந்தர்ப்பம் - ஈரோஸ்

இலங்கையில் மீண்டும் அமைதி ஏற்படுவதற்கு இலங்கை அரசுக்கு சரியான ஆனால் கடைசியான சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது என ஈரோஸ் பொதுச்செயலாளர் வே. பாலகுமார் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த இலங்கை அரசிற்கு இப்போது கிடைத்த இச்சந்தர்ப்பம் கடைசியானது மட்டுமல்ல பொன்னான சந்தர்ப்பமும் கூட இதைப் பயன்படுத்தி அரசு தமிழர்களுக்கு அதிகாரங்களை வழங்க முன்வர வேண்டும் எனவும் பாலகுமார் கேட்டுள்ளார்.

இந்தியப்படைகள் இதுவரை காலமும் இங்கு போரிட்டது குறித்து பார்க்கும் போது நாம் அவர்களுக்காக பரிதாபப்படுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது என அவர் தெரிவித்தார்.

## ரூபவாஹினியில்தமிழ்நிகழ்ச்சிகள் அதிகரிக்க நடவடிக்கை

ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு அதிக நேரங்களை ஒதுக்கும் திட்டம் பற்றித் தற்போது ஆராய்ந்து வருவதாகத் தகவற் துறை இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சியில் மாலை ஆறுமணிக்கு இடம் பெறும் பௌத்த நிகழ்ச்சிகளைப் போல் ஏனைய மத நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்படும். வெள்ளிக்கிழமைகளில் இந்து முஸ்லிம் நிகழ்ச்சிகளும் ஞாயிற்றுகிழமைகளில்கிறிஸ்தவ நிகழ்ச்சிகளும் ஒளிபரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்

இந்தியாவில்இருந்து தமிழ்ப் படங்களை இறக்குமதி செய்ய இருந்துவரும் கட்டுப்பாடுகள் குறித்து இந்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அமைச்சர் சொன்னார்.

## அகில இலங்கை ரீதியில் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

அகில இலங்கைப் பாடசாலை உதைபந்தாட்டச் சங்கம் நடாத்தும் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய உதைபந்தாட்டப் போட்டி மைலோ கிண்ணத்திற்காக 12, 14, 16, 18 வயதுப் பிரிவுகளுக்கிடையில் நடைபெறவுள்ளது பல்தேசிய நிறுவனமான ஒஸ்லேயின் அனுசரணையுடன்நடைபெறவுள்ள இப்போட்டிக்கு யாழ். மாவட்ட 30 பாடசாலைகள் அழைக்கப்பட்டுள்ளன.

முதற் சுற்றுப் போட்டி யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெறும் இறுதிப் போட்டிக்கு ஒவ்வொரு பிரிவிலும் இரு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு கொழும்பிற்கு அழைக்கப்படும் பயணச் செலவுகளைசங்கம்பொறுப்பேற்கும்.

இம்மாதம் 20ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு கொழும்பு 13, விவேகானந்தா மகா வித்தியாலயம் அ. இ. உதைபந்தாட்டச் சங்கச் செயலாளர், எம். சற். பாரூக் அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

### புதிய ..

மற்றும் திருத்தங்களுக்கு மட்டுமே அடையாள அட்டை வழங்கப் பட்டதென மேலும் தெரியவந்துள்ளது.

சட்ட விரோதப் பதிவுகளை தடைசெய்யவும், போலிச் சான்றிதழ் மூலம் அடையாள அட்டை பெறுவதைத் தடுப்பதற்குமே மேற்படி நடவடிக்கை எடுக்கப் பட்டதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் க. பொ. த சாதாரண தர மாணவர்கள் பாதிப்படைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. (03)

### 350 கிராம...

யத்திற் கவனமெடுத்து பேக்கரிகளை அவதானிக்கும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (03)

### வடக்கின்...

16ம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திலும் 17ம் திகதி வவுனியா மாவட்டத்திலும் செஞ்சிலுவைச் சங்கப் பணிமனை திறந்து வைக்கப்படவுள்ளது.

இப்பணிமனைகளை செஞ்சிலுவைச் சங்கச் செயளாளர் நாயகம்ஏ,சுமணதாஸ திறந்து வைப்பார், (06)

### பொலிஸ..

சுக்களை நடத்தியதை யடுத்து ஏற்பட்ட சமரச நிலையை யடுத்து நண்பகலுக்குப் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

இச்சம்பவம் குறித்துமேலும் தெரியவருவதாவது அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களில் நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளதால் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் முன் உள்ள வீதித்தடைகள் ஆகற்றப்பட வேண்டும் என விடுதலைப் புலிகள் கோரியிருந்தனர்.

இதனையடுத்து மட்டக்களப்பு, அம்பாறை, வாழைச் சேனை, ஏறுவூர் உட்பட அநேகமான பொலிஸ் நிலையங்களின் முன்னுள்ள வீதித் தடைகள் அகற்றப்பட்டு வாகன போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டன ஆனால் கல்முனையில் மட்டும் அகற்றப்படவில்லை. பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் வீதித் தடையை அகற்றி சகல வாகனங்களும் போக்குவரத்தினை மேற்கொள்வதற்கு வசதியாகவீதி திறந்து விடப்பட்டது. இச்சமயத்திலே பொலிஸார் துப்பாப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். ஆனால் எவருக்கும் காயமேற்படவில்லை. (05)

### வடக்கு ..

கோரியுள்ளது.

மாகாணசபை கலைக்கப்பட்டால் அரசியற் சட்டப்படி இரு மாதங்களுக்குள் உடன் தேர்தல் நடத்தப்படவேண்டும். இதனால் தேர்தல் நடத்துவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்ட பின்பே மாகாணசபை கலைக்கப்படும்.

புலிகள் தேர்தலில் பங்கு கொள்ள வேண்டுமாயின் 6 வது திருத்தச்சட்டமூலம் நீக்கப்படவேண்டும் அதன் பின்பே மாகாணசபை கலைப்பு இடம்பெறும். அதுவரை மாகாணசபையை ஆளுநர் பொறுப்பேற்பார் என்று நம்பப்படுகிறது. ஜனாதிபதியிடம் ஆளுநர் மாகாணசபை நிர்வாகத்தை ஒப்படைத்தால் அதை ஜனாதிபதி இரு மாதங்கள் மட்டுமே வைத்திருக்கலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### இலங்கை...

யில் புதிய இராணுவ முகாம்கள் எதுவும் திறக்கப்படமாட்டாதெனவும் ஹமீத் உறுதியளித்துள்ளதாகத் தெரியவருகிறது. (05)

### மாகாண சபை...

தங்கள் மூடப்பட்டன,

மாகாணசபை ஊழியர்கள் விடுமுறையில் தமது சொந்த ஊர்களுக்கு திரும்பிக்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## காலமானார்

### க. வாமதேவா

இவர் சொர்ணம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகசபையின் மகனும், காலஞ்சென்ற C. T. நவரட்ணத்தின மருமகனும், காலஞ்சென்ற தருமபுத்திரன், பரமேந்திரன், தியாகேந்திரன், சந்திரவதனி, மதிவதனி, குமரேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நவரத்தினராஜா (கண்ணன்), சௌந்தரராஜன் நீலா, நந்தினி ஆகியோரின் மாமனாரும், சதர்சனா, சஞ்சீவ், தாட்சாயினி, நிலாந்தினி, அருச்சுனா, ராஜ், அருனன், மதுசூதனன ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், இரத்தினசபாபதி. காலஞ்சென்ற நடராஜா, நகேந்திரா ஆகியோரின் சகோதரரும். காலஞ்சென்ற ஸ்ரீபத்மநாதன். என். சம்பந்தன்; திருமதி வெற்றிவேலு, திருமதி பரமேஸ்வரன், திருமதி வன்னியசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவர்,

அன்னாரின் ஈமக்கிரியைகள் வியாழக்கிழமை 15 3 90 10 மணியவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனத்திற்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றரும், உறவினரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

327, நாவலர் வீதி,
நல்லூர்.

03121



இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் [illegible] இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 14-03-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org